


**23. 09. 2025**

## தலைப்பு செய்திகள்

1. குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு 71-வது தேசிய திரைப்பட விருதுகளை புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

2. பாதுகாப்பான ஆரோக்கியமான உணவு பொருட்கள் குறித்த பன்முக அணுகுமுறையின் அவசியத்தை மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் ஜே.பி நட்டா வலியுறுத்தினார்.

3. தமிழ்நாட்டில் தகுதியுடைய பெண்களுக்கு மகளிர் உரிமை தொகை கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

4. தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் அடுத்த மாதம் 14ஆம் தேதி தொடங்குகிறது.

5. கொரிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டிகள் இன்று தொடங்கின.

## இனி விரிவான செய்திகள்

*********

### திரைப்பட விருது

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு 71-வது தேசிய திரைப்பட விருதுகளை புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

பிரபல மலையாள திரைப்பட நடிகர் மோகன்லாலுக்கு தாதாசாகேப் பால்கே விருதை குடியரசு தலைவர் வழங்குகிறார்.

வாத்தி தமிழ் திரைப்படத்திற்கு இசை அமைத்த ஜி.வி. பிரகாஷ் சிறந்த இசையமைப்பாளருக்கான விருதையும்,

பார்க்கிங் படத்தில் நடித்தமைக்காக சிறந்த துணை நடிகருக்கான விருதை எம்.எஸ்.பாஸ்கரும் பெறுகின்றனர்.

*********

சேவை நல்லாட்சி என்ற தாரக மந்திரத்துடன், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கு அயராது செயலாற்றி வரும் நிலையில், திறன்மேம்பாடு பயிற்சிகள் மூலமாக இளையோரின் ஆளுமை உறுதி செய்யப்பட்டது குறித்த சிறப்பு செய்தித்தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

11 ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டின் பிரதமராக, திரு.நரேந்திரமோடி பதவி ஏற்றபோது, லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு ஆளுமை வழங்க வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையுடன், 2015ஆம் ஆண்டு, ஜூலை 15ஆம் தேதி, திறன் மேம்பாட்டு இயக்கத்தை தொடங்கினார்.

தமது தொலை நோக்கு கனவு குறித்து பிரதமர் எடுத்துரைக்கையில்:

இந்த திட்டத்தின் கீழ் கடந்த ஜூலை மாதம் வரை 63 லட்சம் இளையோர் குறிப்பாக 45 சதவிகித பெண்களுக்கு திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் நான்காவது கட்ட பயிற்சிகள் ஏற்கனவே தொடங்கியுள்ள நிலையில், இளையோர், சொந்த தொழில்களை தொடங்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.

திறன் பயிற்சி குறித்து திருச்சி மாவட்ட திறன் பயிற்சி உதவி இயக்குனர் முத்தழகி மற்றும் வேலூரை சேர்ந்த தொழில்முனைவோர்:

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் சீரிய தலைமையில், திறன் இந்தியா இயக்கம், இளையோருக்கு ஆளுமையுடன், உலகளாவிய அங்கீகாரத்தை வழங்கிய நிலையில், இது புதிய இந்தியாவின் முன்னோடி அடையாளமாக உருவெடுத்துள்ளது.

*********

**தர்மேந்திர பிரதான்**

நாட்டில் வலுவான படைப்பாற்றல் சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்தியாவின் படைப்பாற்றல் திறன் குறித்த நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர் இதன்மூலம் ஆராய்ச்சி, ஸ்டார்ட் அப், கல்வி நிறுவனங்களும், தொழிற்சாலைகளும் இணைக்கப்பட்டு புதிய, தொழில்நுட்பங்கள் முன்னெடுக்கப்படும் என்றார்.

பொருளாதாரத்தை உருவாக்கும் நாடாக இந்தியா மாற்றம் பெற வேண்டும் என்றும் அவர் கூறினார்.

*********

**ஜே.பி நட்டா**

பாதுகாப்பான ஆரோக்கியமான உணவு பொருட்களை மக்கள் உட்கொள்வது குறித்த பண்முக அணுகுமுறை தேவை என்று மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் ஜே.பி நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உணவு ஒழுங்குமுறை உச்சிமாநாட்டிற்கான சின்னத்தை இன்று வெளியிட்டு பேசிய அவர், மாறிவரும் உணவு பழக்கங்களையும், சந்தை முறைகளையும் உணவு துறையினர் கவனத்துடன் கண்காணிக்க வேண்டும் என்றார்.

ஊட்டசத்தோடு, மனநலம், உடல் நலம், சமூக நல்லிணக்கத்திற்கும் உணவு வழிகோலுவதாக எடுத்துரைத்த அவர், உணவின் தரமும், அதுசார்ந்த ஒழுங்குமுறை நெறிகளும் மேம்படுத்தப்பட வேண்டும் என்றார்.

புதுதில்லியில் வரும் வெள்ளிக்கிழமை உலகளாவிய இரண்டு நாள் உணவு ஒழுங்குமுறை உச்சிமாநாடு தொடங்க இருப்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

*********

**ஆயுர்வேத தினம்**

10ஆவது தேசிய ஆயுர்வேத தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

"மக்களுக்கும், கோள்களுக்கும் நலம் தரும் ஆயுர்வேதம்" என்பதை கருப்பொருளாக கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கோவாவில் மத்திய ஆயுஷ் இணை அமைச்சர் திரு.பிரதாப் ராவ் ஜாதவ் ஆயுர்வேத நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

தேசிய தன்வந்திரி ஆயுர்வேத விருதுகளும் இன்று வழங்கப்படுகின்றன.

ஆயுர்வேத மருத்துவத்தின் முக்கியத்துவம் குறித்து கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியின் டீன் டாக்டர் **கிளாரன்ஸ் டேவி** தெரிவிக்கையில்:

*********

**சரக்கு சேவை வரி**

சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் நேற்று நடைமுறைக்கு வந்துள்ள நிலையில், இரண்டடுக்கு GST மட்டுமே நடைமுறைபடுத்தப்படுகிறது.

பொம்மை உற்பத்தி செய்யும், சிறு குறு தொழில்முனைவோர் மற்றும் ஜவுளித்துறையினர் இதனால் பயனடைந்துள்ளனர். திருப்பூரை சேர்ந்த ஜவுளி ஏற்றுமதி, உற்பத்தி சங்க தலைவர் **முத்துரத்தினம்** இதுகுறித்து தெரிவிக்கையில்

*********

**கருத்தரங்கு**

மத்திய திறன்மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படும், தேசிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி குழுவின் சார்பில், தென் மாநிலங்கள் பங்கேற்கும், படைப்பாற்றல் திறன் பயிற்சி கருத்தரங்கு நாளை சென்னையில் நடைபெறுகிறது. தமிழகம், தெலங்கானா, ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மாநிலங்கள், புதுச்சேரி, லட்சதீவு யூனியன் பிரதேசங்கள் இதில் பங்கேற்கின்றன. தேசிய படைப்பாற்றல் தரத்திற்கான நெறிமுறைகளை ஒருங்கிணைத்து, கொள்கைகள் உருவாக்கம் குறித்து இதில் விரிவாக ஆலோசிக்கப்படுகிறது.

திறன்மேம்பாட்டு பயிற்சிகளும், அது சார்ந்த பணி பட்டறைகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதோடு பல்வேறு மாநிலங்களில் உள்ள திறன்மேம்பாட்டு துறைகளையும் ஒருங்கிணைத்து இந்த திட்டத்தை முன்னெடுத்து செல்ல இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

*********

**முதலமைச்சர்**

தமிழகத்தை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 நாட்களுக்கு ஒருமுறை தொகுதி பணியாற்ற திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர், வாரத்தில் நான்கு நாட்கள் தொகுதியில் பணியாற்றிய அறிக்கையை தம்மிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

தமிழக அரசின் மக்கள் நல திட்டங்கள் குறித்த பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து, உரிய நடவடிக்கை எடுக்க, மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து பணியாற்றவும் முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

தகுதியுள்ள பெண்களுக்கு மகளிர் உரிமை தொகை கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் முதலமைச்சர் கூறினார்.

*********

**சட்டப்பேரவை கூட்டத்தொடர்**

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் அடுத்த மாதம் 14ஆம் தேதி தொடங்குகிறது.

இதற்கான அறிவிப்பை பேரவை தலைவர் திரு.அப்பாவு இன்று வெளியிட்டார்.

இக்கூட்டத்தொடரில் நடப்பு நிதியாண்டில், கூடுதல் செலவினங்களுக்கான மானியக்கோரிக்கை தாக்கல் செய்யப்படும்.

இக்கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து அலுவல் ஆய்வுக்குழு கூடி முடிவு செய்யும் என்று திரு.அப்பாவு தெரிவித்தார்.

*********

**கே.என்.நேரு**

திருச்சி அரசு தலைமை மருத்துவமனையில் 37அரை லட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சித்த மருத்துவ பிரிவு, உள் நோயாளிகளுக்கான சிறப்பு சிகிச்சை கட்டிடத்தை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு இன்று தொடங்கிவைத்தார்.

கோ ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனையையும் அமைச்சர் தொடங்கிவைத்தார்.

இந்தாண்டு தீபாவளி விற்பனை இலக்காக 2 கோடியே 75 லட்ச ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

*********

உதயநிதி

விருதுநகர் மாவட்டத்தில் 75 சதவிகித வளர்ச்சி பணிகள் நிறைவடைந்துள்ளதாக துணை முதலமைச்சர் திரு.உதய நிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வளர்ச்சி பணிகள், அரசின் நல திட்டங்கள் குறித்து இன்று ஆய்வு மேற்கொண்ட அவர், எஞ்சிய 25 சதவிகித பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டார்.

இம்மாவட்டத்தில், மினி உள் விளையாட்டரங்க பணிகள் நடைபெறுவதாகவும் அவர் எடுத்துரைத்தார். விளையாட்டு தொடர்பான கண்காட்சியையும் அவர் பார்வையிட்டார்.

*********

எடப்பாடி

நீலகிரி மாவட்டத்தில் அஇஅதிமுக ஆட்சியின்போது தான், 400 கோடி ரூபாய் செலவிலான மருத்துவக்கல்லூரி திட்டம் செயல்படுத்தப்பட்டதாக கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி கூறியுள்ளார்.

குன்னூரில் இன்று பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், இதன்காரணமாக இப்பகுதி மக்கள் சிகிச்சைக்காக கோவை - மேட்டுப்பாளையம் பகுதிகளுக்கு செல்வது தவிர்க்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

நீலகிரி மாவட்டத்தில் நிலவும், இ-பாஸ் பிரச்சனை, போதை பொருள் விற்பனை உள்ளிட்ட கிடப்பில் உள்ள அனைத்து பிரச்சனைகளுக்கும் அஇஅதிமுக ஆட்சி அமைந்த பின்னர் தீர்வு எட்டப்படும் என்றும் அவர் கூறினார்.

வரும் சட்டமன்ற தேர்லில் அதிமுக தலைமையிலான கூட்டணிக்கு பொதுமக்கள் வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

*********

இருவரி

**பெரம்பலூர் மாவட்டத்தில் மத்திய அரசின் மிஷன்** சக்தி திட்டத்தின் கீழ், மாவட்ட மகளிர் மையத்தில் உள்ள தகவல் தொழில்நுட்ப உதவியாளர் காலிப்பணியிடத்திற்கு தகுதியுடையவர்கள் வரும் 10ஆம் தேதி மாலைக்குள் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி **மிருணாளினி** கூறியுள்ளார்.

**நாகை மாவட்டத்தில் பிரதமரின் மீன்வள மேம்பாட்டு** திட்டத்தின் கீழ் மானியம் பெற விரும்பும் மீன்வள விவசாயிகள், மாவட்ட மீனவர் நல உதவி இயக்குனர் அலுவலகத்திற்கு விண்ணப்பித்து பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் கூறியுள்ளார்.

**நாமக்கல் மாவட்டத்தில்** பிரதமரின் கல்வி உதவிதொகை திட்டத்திற்கு பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபின மாணாக்கர் வரும் 30ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி துர்கா மூர்த்தி அறிவுறுத்தியுள்ளார்.

**திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில்** மாநில தொடக்க கூட்டுறவு, வங்கி பணியாளர்கள் ஆலோசனை கூட்டத்தில், 8 டெல்டா மாவட்டங்களின் கோரிக்கைகள் குறித்து இன்று ஆராயப்பட்டது.

*********

**வருமானவரி**

திருப்பூர் மாவட்டம் உடுமலை மற்றும் நாமக்கல் மாவட்டம் மோகனூரில் அமைந்துள்ள தனியார் கோழிப்பண்ணை அலுவலகங்களில் வருமான வரி துறை அதிகாரிகள் இன்று சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

வருமானத்திற்கு அதிகமாக சொத்து குவித்ததாக கூறப்படும் புகாரை அடுத்து இந்த சோதனைகள் நடைபெறுகின்றன.

*********

**பேட்மிண்டன்**

கொரிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டிகள் Suwon-இல் இன்று தொடங்கின.

இந்தியாவின் H.S. பிரணாய், ஆயுஷ் ஷெட்டி, கிரண் ஜார்ஜ், அனுபமா உபாத்யாயா உள்ளிட்டோர் இதில் களமிறங்குகின்றனர்.

*********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**